**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**

**அசல் வழக்கு எண். 16/2009**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 17-04-2026-ஆம் நாளாகிய இன்று மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 17-04-2026 | சாட்சி | பி.சா.1 |
| பெயர் | திரு.மகாவிஷ்னு | வயது. | 39 |
| தந்தை பெயர் | திரு. ராமச்சந்திரன் | | |

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

1) கலியமூர்த்தி குடும்பத்தார் கொத்தட்டை பிள்ளையார் கோயில் தெருவில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். கலியமூர்த்தி வீட்டிற்கு கிழக்குப்பக்கமாக வழக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கிழக்கே ராஜேந்திரனுக்கு சொந்தான வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் எண்.01/8. கலியமூர்த்தியும் குப்புசாமி சகோதரர்கள் என்றால் இல்லை, ஒன்றுவிட்ட பங்காளி முறையில் சகோதரர்கள். கலியமூர்த்தி மற்றும் குப்புசாமியின் தகப்பனார்கள் சகோதரர்கள் என்ற அடிப்படையில் பங்காளி உறவுமுறை ஆவர். குப்புசாமியின் குடும்பம் எங்கு இருந்தார்கள் என்றால் முதலில் கொத்தட்டை கிராமம் பிள்ளையார் கோயில் தெருவில் இருந்தார்கள், பின்னர் 25 வருடங்களுக்குமுன்பு கலியமூர்த்திக்கும், குப்புசாமிக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் கொத்தட்டை கிராமம் அங்காளம்மன் கோயில் தெருவிற்கு குடிபெயர்ந்துவிட்டார்கள். குறிப்பிட்டு எந்த வருடம் குப்புசாமி குடும்பத்தினர் அங்காளம்மன் கோயில் தெருவிற்கு குடிபெயர்ந்தனர் என்றால் குறிப்பிட்டு வருடம் ஞாபகமில்லை.

2) எனக்கு 13 வயதாகும்போது அவர்கள் குடிபெயர்ந்தார்களா என்றால் ஆமாம். பி.சா.ஆ.7 ஆவணமான பென்ஷன் ரசீது கொத்தட்டை அங்காளம்மன் கோயில் தெரு முகவரியில் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.6 ஆவணமான சக்திவேல் மாற்று சான்றிதழ் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் குப்புசாமியின் கையொப்பத்தை நிருபிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடம் பி.சா.ஆ.6 ஆவணத்தில் குப்புசாமி கையொப்பம் போட்டார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. பி.சா.ஆ.6 ஆவணத்தில் குப்புசாமி கையொப்பம் போட்டதை நான் நேரடியாக பார்க்கவில்லை

என்றால் சரிதான்.02-07-2008-ல் நானும் எனது தாயாரும் தனித்தனியாக குப்புசாமியின் வாரிசுகளிடமிருந்து கிரயம் பெற்றோம் என்றால் சரிதான். குப்புசாமி 2009-ல் காலமானார்.02-07-2008-ல் கிரயம் பெற்றபோது குப்புசாமி உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். தகப்பனாரான குப்புசாமி உயிருடன் உள்ளபோது அவரின் மனைவி தனம் அம்மாள் மற்றும் மகன் சக்திவேல், மகள் தையல்நாயகி மற்றும் இளவர் மகளான கார்த்திகாவிற்கு பாதுகாவலர் என்ற அடிப்படையில் குப்புசாமியின் மகன் சக்திவேல் ஆகியோரிடமிருந்து கிரயம் பெற்றோம் என்றால் சரிதான். நாங்கள் கிரயம் பெறுவதற்குமுன்பு வழக்கு சொத்து சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தகப்பனார் இருக்கும்போது அவரின் வாரிசுதாரர்களிடமிருந்து கிரயம் பெறலாமா என்பது குறித்து வழக்கறிஞரிடம் கருத்துரை (Opinion) பெற்றேனா என்றால் இல்லை.

3) இளவர் கார்த்திகாவிற்கு பாத்தியமான சொத்தை கிரயம் பெறலாமா என்பது குறித்து வழக்கறிஞரிடம் கருத்துரை (Opinion) பெற்றேனா என்றால் இல்லை. இளவருக்கு பாத்தியமான சொத்தை கிரயம் பெறுவதற்கு மாவட்ட நீதிமன்றத்தில் அனுமதி பெறவேண்டும் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.02-07-2008-ல் கிரய ஆவணத்திற்கான முத்திரை தாள் (Stamp Paper) எப்போது எவ்வளவு மதிப்பிற்கு வாங்கப்பட்டது என்றால் கிரயம் செய்வதற்கு முந்தைய நாள் வாங்கப்பட்டது, எவ்வளவு மதிப்பிற்கு என்று தற்போது ஞாபகமில்லை. கிரய ஆவணம் ஏற்படுத்துவதற்கு குப்புசாமி ஏன் வரவில்லை என்றால் குப்புசாமியின் குடும்பத்தினர் மகள் தையல்நாயகியின் திருமணத்திற்கும், குப்புசாமியின் மருத்துவ செலவிற்கும் அவசரமாக பணம் தேவைப்படுவதாக எங்களிடம் கேட்டனர் அதற்கு அவர்களுக்கு சொந்தமான நிலத்தை கிரயம் செய்து தருவதாக சொல்லியதால் ரூ.1 லட்சம் கொடுத்தோம். பின்பு கிரயம் செய்ய சொல்லி கேட்டபோது அந்த சமயத்தில் குப்புசாமி புற்று நோயால் பாதிக்கப்பட்டு உயிருக்கு போராடிய கோமா நிலையில் இருந்ததால் சார் பதிவாளரின் ஆலோசனையின் அடிப்படையில் குப்புசாமியின் வாரிசுதாரர்களை வைத்து கிரய ஆவணம் செய்யப்பட்டது. தையல்நாயகிக்கு 2008-ல்திருமணம் நடந்தது, மாதம், தேதி ஞாபகமில்லை.

4) கிரய ஆவணம் செய்வதற்கு ஒன்றரை மாதத்திற்குமுன்பு ரூ.1 லட்சம் பணம் கொடுக்கப்பட்டது, மீதி கிரயஆவணம் எழுதும்போது கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. மீதி எவ்வளவு தொகை கிரயம் ஆவணம் எழுதும்போது கொடுக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. கிரய தொகை எவ்வளவு பேசப்பட்டது என்றால் 1 சென்ட் ரூ.4,500-ஆக பேசப்பட்டது. குப்புசாமி புற்று நோயால் பாதிக்கப்பட்டு கோமா நிலையில் இருந்தார் என்பதற்கான ஆவணம் உள்ளதா என்றால் குப்புசாமியின் குடும்பத்தினரிடம் உள்ளது. குப்புசாமியின் மகள் திருமண செலவிற்காகவும்,

குப்புசாமியின் மருத்துவ செலவிற்காகவும் பணம் கொடுத்த விவரத்தை எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. குப்புசாமியின் மருத்துவ சிகிச்சைக்காக நான் அவருடன் உடன் சென்றேனா என்றால் இல்லை.(குப்புசாமி புற்று நோயால் பாதிக்கப்பட்ட விவரத்தை எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு எனது வழக்கறிஞரிடம் சொன்னேனா என்று வாதி தரப்பு எழுப்பிய வினாவானது Privillaged Communication என்ற அடிப்டையில் சாட்சியிடம் கேட்க அனுமதிக்கப்படவில்லை). பி.சா.ஆ.10 கிரய ஆவணத்தில் உள்ள ஷரத்துக்கள் உண்மையானவை என்றால் சரிதான்.02-07-2008-ல் எனது தாயார் பெற்ற கிரய ஆவணத்தில் உள்ள ஷரத்துக்கள் உண்மையானவை என்றால் சரிதான்.

5) பி.சா.ஆ.10 ஆவணத்தின் 3-ஆவது பக்கத்தில் "நாங்கள் நாளது தேதியில் எங்களின் குடும்பார்த்தமான செலவுகளுக்காக தங்களிடம் ரொக்கமாகப் பெற்றுக்கொண்டது ரூ.40,000/- இந்த ரூபாய் நாற்பதாயிரமும் மேற்கண்ட விபரப்படி இன்றே எங்களின் பைத்தாகி விட்டப்படியால்"என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.10 ஆவணத்தை தயார் செய்தவர் வழக்கறிஞர் ஜெயச்சந்திரன் என்றால் சரிதான். குப்புசாமி புற்று நோயால் பாதிக்கப்பட்ட விவரத்தை ஆவணத்தை தயாரிக்கும்போது ஆவணத்தை தயாரித்த வழக்கறிஞர் மற்றும் எழுத்தரிடம் சொன்னேனா என்றால் எழுத்தரிடம் சொன்னேன், வழக்கறிஞரிடம் சொன்னதுப்பற்றி தற்போது ஞாபகமில்லை. பி.சா.ஆ.10 ஆவணமானது குப்புசாமியின் மனைவியும் ஒரு தரப்பாக எழுதிகொடுத்தாரா என்றால் ஆமாம். இளவர் கார்த்திகா Major ஆனபிறகு அவரிடம் பி.சா.ஆ.10 கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டதற்கான சம்மதபத்திரம் எழுதி வாங்கப்பட்டதா என்றால் இல்லை, அது தேவைப்படவில்லை.(தற்போது சாட்சி அதுகுறித்து எனக்கு தெரியாது என்று கூறுகிறார்).

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(S/D.Thiru.D.Yuvaraj)
District Munsif cum Judicial Magistrate,
Portonovo.